Clr.No.19

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

------

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | Case No. CC.189/2022 |
| Sessions | : | |
| | | Prosecution |
| Deposition of witness for | : | PW 1 |
| Name | : | ரோகித் கோயல் |
| Father's/Husband's Name | .. | பிரேம் குமார் |
| Village | | |
| Taluk | .. | |
| Caste | .. | |
| Calling | .. | |
| Religion | .. | |
| Age | .. | 39 |

Date: 08.11.2024

(Solemnly affirmed before this court under act X of 1969)

எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்.

முதல் விசாரணை:-

1. நான் தண்டையார்பேட்டை பகுதியில் வசித்து வருகிறேன். கடந்த 20 வருடங்களாக இரும்பு சம்பந்தப்பட்ட தொழில் செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியாது. தேதி மற்றும் மாதம் எனக்கு ஞாபகம் இல்லை. கடந்த 2022 அன்று சடையன் குப்பத்தில் நாங்கள் நடத்திவரும் இரும்பு சம்பந்தப்பட்ட நிறுவனத்தில், இரும்புகள் திருடப்பட்டுள்ளது என்ற தகவல் கிடைத்தது. காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது

தான் அது நான் கொடுத்த புகார். (புகார் அ.சா.ஆ.1 ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறத). போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

கற்றறிந்த அரசு தரப்பு உதவி குற்றவியல் வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கும்படி கோரிக்கை விடுத்தார். பரிசீலிக்கப்பட்டது. சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-

2. கடந்த 22.5.2022 அன்று காலை சுமார் 11 மணி அளவில் ஆஜர் எதிரி எங்கள் நிறுவனத்தில் இருந்த 300 கிலோ எடை கொண்ட இரும்பு பொருட்களை களவாட முயற்சி செய்தார், எங்களை கண்டவுடன் அவர் ஓடி விட்டார். காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்று போலீசார் விசாரணையின் போது நான் கூறினேன் என்றால் சரியல்ல.